**World Tamil Christian Fellowship**
60, High Worple, Rayners Lane, Harrow
Middlesex, HA2 9SZ, United Kingdom
www.wcflondon.com
wcflondon@gmail.com

# இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை – பாடம் 2

## யூத திருமணம்

இயேசு தம்முடைய பல உவமைகளுக்கு யூத திருமணத்தை கொண்டு உவமைகளை கூறியிருப்பதை நாம் காண முடியும். மத்தேயு 22:1-14(திருமண விருந்தின் உவமை) and மத்தேயு 25:1-13 (பத்து கண்ணிகைகளின் உவமை).

ஆகவே, இயேசு கிறிஸ்து பூமியில் வாழ்ந்த நாட்களில் யூத திருமணம் எப்படி நடந்தது என்று சற்று பாப்போம்.

நினைவில் கொள்ளுங்கள், உங்களுக்கு பிடிக்கறதோ இல்லையோ, நமது ஆண்டவர் ஒரு யூத குடும்பத்தில் பிறந்தவர்!! அவர் ஒரு யூதர்!!

என்னோடு கூட முதலாம் நூற்றாண்டின் மத்திய ஆசிய தேசங்களுக்கு வாருங்கள், அவர்களின் முறைகளை அறிந்து கொள்வதன்மூலம் நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து தமது வருகையை

*குறித்து நமக்கு கற்பித்ததை முழுமையாக புரிந்துகொள்ள இது உதவியாக இருக்கும்.*

*சபையாகிய நாம் அவரின் மணவாட்டி (அல்லது மணமகள்), அவர் நமது மணவாளன்.*

1. ***கெட்டுபாஹ் அல்லது நிச்சயித்தல்***
   **Ketubah or Betrothal**

*ஒரு திருமண உடன்படிக்கை செய்யப்படுவதற்கு முதல் படி இந்த கெட்டுபாஹ் எனும் நிச்சயதார்த்தம்.*

2. ***மணவாளன் முதல்படி எடுப்பார்***
   **Bridegroom takes the initiative**

*மணவாளன் முதலாவதாக தனது தந்தையிடம் தனது மணவாட்டியை குறித்து பேசுவார். தந்தை தனது மகனை சில நாட்களுக்கு தனியே தன்னோடு அழைத்துக்கொண்டு போய் திருமணத்தில் மணமகனுக்கு இருக்கும் பொறுப்புக்களை விவரித்து, அதோடு வரும் பிரச்சனைகள், சந்தோசங்கள், வேதனைகள், மகிழ்சிகள் யாவற்றையும் விளக்கமாய் கூறுவார்.*

### 3. *மொஹேர் அல்லது மணமகள் கட்டணம் (வரதட்சனை)*
### Mohair or Bride Price

*மணமகளின் தந்தை மணமகனின் தந்தையை சந்தித்து மணமகளுக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை நிர்ணயம் செய்வார். மணமகன் இந்த கட்டணத்தை சுயமாக சம்பாதித்து செலுத்த வேண்டும். மணமகனின் தந்தை இதற்கு உதவி செய்ய மாட்டார். ஆகவே மணமகன் தான் சுயமாய் சம்பாதித்து இந்த கட்டணத்தை மனமகளுக்கென்று செலுத்த வேண்டும்.*

### 4. *மணமகள் கட்டணம் செலுத்துதல்*
### Bride Price Paid

*மணமகன் இந்த கட்டணத்தை சம்பாத்து செலுத்தினதும், திருமண உடன்படிக்கை ஏற்படுத்தப்படும். இதிலிருந்து அந்த வாலிபனும் அந்த பெண்ணும் கணவன் மனைவி என்று கருதப்படுவர்.*

### 5. *தனித்து வைத்தல் (பிரித்தெடுத்தல்)*
### Set apart

*மணமகள் கட்டணம் செலுத்தப்பட்டு திருமண உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட அந்த நிமிடம் முதல் மணமகள் (மணவாட்டி) அந்த*

*மணவாளனுக்கென்று பரிசுத்தப்படுத்தப்பட்டு பிரித்தெடுக்கப்படுவாள்.*

6. ***நிச்சயதார்த்த வாழ்த்து***
   **Betrothal benediction**

*திருமண உடன்படிக்கை நிச்சயிக்கப்பட்டதின் அடையாளமாக மணவாளனும் மணவாட்டியும் ஒரே துருத்தியில் திராட்சை ரசம் அருந்துவார்கள்.*

7. ***12 மாத பிரிவு***
   **Separation for 12 months**

*திருமண உடன்படிக்கை நிச்சயிக்கப்பட்டதற்கு பிறகு, மணவாளன் மணவாட்டியை பிரிந்து சுமார் 12 மாதமளவும் தனது தந்தையின் வீட்டில் தங்கியிருப்பார்.*

8. ***ட்ருஸோ***
   **Trosseau**

*ட்ருஸோ என்றால் மணவாட்டி தனது திருமணத்திற்கென்று சேர்த்து வைக்கும் மெல்லிய நூலினால் ஆன உடை மற்றும் பிற காரியங்கள்.*

*இந்த 12 மாத பிரிவின் போது மணவாட்டி தனது திருமண வாழ்வுக்கென்று இந்த ட்ருஸோக்களை சேமிப்பாள்.*

## 9. மணவாட்டிக்கென்று ஒரு இடத்தை ஆயத்தம் செய்தல்

## Preparing a place for bride

மணவாளன் தனது தந்தையின் வீட்டிற்கு சென்று தானும் தன்னுடைய மணவாட்டியும் தங்குவதற்கு ஒரு இல்லத்தை கட்டுவார். இந்த வீட்டை கட்டுவதற்கு தந்தை உதவ மாட்டார். மணமகனே இந்த வீட்டை கட்ட வேண்டும்.

மணவாளனின் தந்தை அந்த வீட்டை பார்த்து திருப்தியடையும்போதுதான் திருமணத்திற்கு ஒப்புக்கொள்வார்.

## 10. மனவாட்டிக்கு அந்த நேரம் தெரியாது

## Bride doesn’t know the time

மணவாட்டி மனவாளனுக்கென்று காத்திருக்கும்போதும் அவர் எப்போது வருவார் என்று அவளுக்கு தெரியாது. மணவாளனுக்குக்கூட தனது தந்தை எப்போது ஒப்புக்கொள்வார் என்று தெரியாது. ஆகவே மணவாளனுக்கும் மனவாட்டிக்கும் இரண்டு பேருக்கும் திருமண நாள் தெரியாது.

## 11. மணவாட்டியை அழைத்து செல்ல வரும் ஊர்வலம்

## Procession to take the Bride

*மணவாளன் ஆயத்தம் பண்ணின வீட்டை தந்தை அங்கீகரித்த பிறகு, நள்ளிரவிலே ஊர்வலம் தொடங்கும். மணவாளனின் வருகையின்போது மணவாளனின் தோழர் விளக்கை எடுத்துக்கொண்டு ஊர்வலமாக பெரும் ஆரவாரத்தோடு தந்தையின் வீட்டிலிருந்து மணவாட்டியின் வீட்டிற்கு வருவார்கள்.*

## 12. மணவாட்டி மனவாளனோடு சென்றுவிடுவாள்

## Bride leaves with groom

*மணவாளன் வந்ததும் மணவாட்டி அவரது செல்ல தயாராக இருப்பாள். மணவாளன் தன்னுடைய மணவாட்டியை சேர்த்துக்கொண்ட பிறகு, மணவாட்டியின் தோழிகளோடு மணவாளனின் தந்தையின் வீட்டிற்கு சென்று பெரும் விருந்தில் பங்கெடுப்பார்கள்.*

## 13. திருமண விருந்தினர்கள் திரட்டப்படுதல்

## The wedding guests had assembled.

*தந்தையின் வீட்டிற்கு வந்தவுடன், அங்கு திருமண வீட்டிற்கு வந்திருப்பவர்கள் மணவாளனையும்*

*மணவாட்டியையும் மணவறைக்கு (huppah ஹூப்பா) அழைத்து செல்வார்கள். அந்த அறைக்குள் பிரவேசிக்கும்வரை மணவாட்டியின் முகம் யாரும் பார்க்ககூடாத வகையில் திரை போட்டு மூடப்பட்டிருக்கும்.*

14. ***மணவாளனும் மணவாட்டியும் ஒன்றிணைதல்***

**Physical union of the Bride and Groom**

*மணமக்களின் தோழர்களும் தோழிகளும் வெளியே காத்திருப்பார்கள். அப்போது மணவாளனும் மணவாட்டியும் அவர்களுக்குரிய அறையில் தனித்து விடப்படுவர். அங்கே அவர்கள் திருமண பந்தத்திற்குள் சரீரப்பிரகாரமாக ஒன்றிணைந்து தாங்கள் சுமார் ஒரு வருடத்திற்கு முன்னர் ஏற்படுத்திய உடன்படிக்கையை பூரனப்படுத்துவார்கள்.*

15. ***திருமண பந்தம் அறிவிக்கப்படுதல்***

**Declaration of consummation of marriage**

*திருமண பந்தத்தில் அவர்கள் இணைந்த பிறகு, மணவாளன் வெளியே வந்து திருமண பந்தத்தில் அவர்கள் இணைந்ததை திருமண விழாவில் வெளியே காத்திருக்கும் தோழர் தோழிகளிடம் அறிவிப்பார்.*

16. **திருமண பந்தம் எல்லோருக்கும் அறிவிக்கப்படுதல்**
**Consummation announced all**

*மீண்டும் மணவாளன் மணவறைக்கு மனவாட்டியிடம் சென்ற பிறகு, வந்திருக்கும் விருந்தினர் யாவருக்கும் திருமண பந்தம் நிறைவேறியதை அறிவிப்பார்கள்.*

17. **ஏழு நாட்களுக்கு தொடங்கும் திருமண விருந்து**
**Wedding Feast starts for seven days**

*இந்த மகிழ்ச்சியான செய்தியை அறிந்ததும், திருமணத்திற்கு வந்திருக்கும் விருந்தினர் தந்தையின் வீட்டில் ஏழு நாளளவும் தங்கி கொண்டாடுவர்.*

18. **மணவாளனும் மணவாட்டியும் ஏழு நாட்களுக்கு மறைத்து வைக்கப்படுவார்கள்**
**Bridegroom and bride are hidden for seven days**

*திருமண விருந்து நடைபெறும் ஏழு நாட்களும் மணவாளனும் மணவாட்டியும் மணவறையில் மறைத்து வைக்கப்படுவார்கள்.* (ஆதியாகமம் 29:21-23, 27-28)

## 19. மணவாட்டி அனைவருக்கும் அறிமுகப்படுத்தப்படுகிறாள்
## Bride is shown to all

*பின்னர் மணவாளன் மறைவிடத்திலிருந்து தன்னுடைய மணவாட்டியோடு வருவார். அப்போது மணவாட்டியின் முகம் மறைக்கப்படாமல் அனைவரும் பார்க்கும் வண்ணம் திறந்த முகத்தோடு அழைத்துக்கொண்டு வருவார்.*

## ***உண்மையான மணவாட்டி***

## The Ultimate Bride

*இதுவரை நாம் யூத திருமணத்தை விவரமாக பார்த்தோம். இப்போது இயேசு கிறிஸ்து மணவாளனாக தம்முடைய மனவாடியாகிய சபைக்கு இந்த காரியங்களை எப்படி நிறைவேற்றுகிறார் என்று பார்ப்போம்.*

**யோவான் 14:1-3,** *இயேசு தாம் சென்று நமக்கென்று ஒரு இடத்தை ஆயத்தப்படுத்தி நம்மை அவரோடு அழைத்து செல்வதாக கூறியிருக்கிறார். இது எந்தெந்த முறையில் யூத திருமணத்தை சார்ந்து இருக்கிறது என்று பார்ப்போம்.*

***சபை கிறிஸ்துவின் மணவாட்டி!***

**Church is the bride of Christ!**

***எபேசியர் 5:22-25,*** *மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள். 23. கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். 24. ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். 25. புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து,*

***மணமகளை தேடி***

**Looking for a Bride**:

- *யூத மணமகன் தனது தந்தையின் வீட்டை விட்டு தான் மனமுடிக்கப்போகும் பெண்ணின் வீட்டிற்கு தாமாக செல்வார்.*
- *இயேசு தமது தந்தையின் வீட்டை விட்டு தாம் மணமுடிக்கும் மனவாட்டியாகிய சபை இருக்கும் இந்த பூமிக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னர் வந்தார்.*

***பிதாவாகிய தந்தையும் குமாரனாகிய ஏசுவும் தனிமையில் காலம் செலவழித்தனர்.***

**Father God and Son Jesus spent time alone.**

- *யூத தந்தை தனது மகனை அழைத்துக்கொண்டு தனியே போய் திருமணத்தில் உள்ள காரியங்களை எல்லாம் அறிவிப்பார்.*
- *பிதாவாகிய தேவனும் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் வனாந்திரத்தில் தனியே நேரம் செலவழித்தனர்.*

***மணமகள் கட்டணம்:***

**Bride Price:**

- *யூத மணவாளன் மணமகளின் வெற்றிக்கு வந்து அவளை சேர்த்துகொள்ளும் படி திருமண உடன்படிக்கை செய்வார்.*
- *இயேசுவும் உலகத்திற்கு வந்து சபையை தம்மோடு சேர்த்துக்கொள்ள உடன்படிக்கை ஏற்படுத்தினார்*

  **1 கொரிந்தியர் 11:25**, "*இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது*"
  *தாம் சிலுவையில் இரத்தம் சிந்துவத்தின் மூலம் புதிய உடன்படிக்கை ஏற்படுத்தி*

*காண்பித்தார். தம்முடைய மனவாட்டிக்காக தம்முடைய சொந்த இரத்தைத்தை கட்டணமாக செலுத்தி மணவாட்டியை சம்பாதித்தார்..*

**1 கொரிந்தியர் 6:19-20,** *உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? 20. கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.*

***தனித்து வைத்தல் (பிரித்தெடுத்தல்)***

## Set apart

*மணமகள் கட்டணம் செலுத்தப்பட்டு திருமண உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட அந்த நிமிடம் முதல் மணமகள் (மணவாட்டி) அந்த மணவாளனுக்கென்று பரிசுத்தப்படுத்தப்பட்டு பிரித்தெடுக்கப்படுவாள்.*

*சபை கிறிஸ்துவுக்கென்று பிரத்தியேகமாக பரிசுத்தப்படுத்தப்பட்டு தனியே பிரித்து வைக்கப்பட்டுள்ளது.*

**எபேசியர் 5:25-27,** *25. புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, 26. தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், 27. கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.*

**1 கொரிந்தியர் 1:2,** *கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது:*

*1* **கொரிந்தியர்** *6:11, உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களா-யிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்.*

**எபிரேயர் 10:10**, *இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்.*

**எபிரேயர் 13:12**, *அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்.*

***நிச்சயதார்த்த வாழ்த்து***

## Betrothal benediction

- *திருமண உடன்படிக்கை நிச்சயிக்கப்பட்டதின் அடையாளமாக திராட்சை ரசம் பகிர்ந்துகொடுக்கப்படும்.*
- *திருவிருந்தில் நாம் பானம் பண்ணும் பாத்திரம் கிறிஸ்து நம்மை மீட்டுக்கொண்ட உடன்படிக்கையின் அடையாளமாக எறேடுக்கிறோம்.*

  **1 கொரிந்தியர் 11:25**, *"இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது"*

***மனவாட்டியிடமிருந்து பிரிவு***

## Separation from the Bride

- *திருமண உடன்படிக்கை நிச்சயிக்கப்பட்டதற்கு பிறகு, மணவாளன் மணவாட்டியை பிரிந்து சுமார் 12 மாதமளவும் தனது தந்தையின் வீட்டில் தங்கியிருப்பார்.*
- *புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தி மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த பின்னர்,* *சபை வாழும் இந்த உலகத்தை விட்டு கிறிஸ்து பரலோகத்தில் உள்ள தமது தந்தையின் வீட்டிற்கு திரும்பிவிட்டார்.*

  **யோவான் 6:62,** *மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்?*

  **யோவான் 20:17**, *இயேசு அவளை நோக்கி: என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை; நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு என்றார்.*

*இந்த பிரிவின் காலத்தில் கிறிஸ்து தமது சபையை விட்டு சுமார் 2000 ஆண்டுகள் பிரிந்திருக்கிறார். சபை இப்போது இந்த காலத்தில்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறது.*

***ட்ருஸோ (மணவாட்டியின் ஆடைகள்)***

## Trosseau (Clothes of the Bride)

- *ட்ருஸோ என்றால் மணவாட்டி தனது திருமணத்திற்கென்று சேர்த்து வைக்கும் மெல்லிய நூலினால் ஆன உடை மற்றும் பிற காரியங்கள். யூத மணமகன் தான் திரும்ப வருவதன் நிச்சியத்தின் ஒரு அடையாளமாக தனது ஆடைகளை மனவாட்டியிடம் விட்டுச்செல்வார்.*
- *இயேசு மரித்தபோது தம்மை சுற்றிவைத்திருந்த துணியை மடித்து பத்திரமாக தம்முடைய மனவாட்டியாகிய சபைக்கு அடையாளமாக வைத்தார்.*

  **யோவான் 20: 5-7,** *5. அதற்குள்ளே குனிந்துபார்த்து, சீலைகள் கிடக்கிறதைக் கண்டான்; ஆனாலும் அவன் உள்ளே போகவில்லை. 6. சீமோன் பேதுரு அவனுக்குப்பின்னே வந்து, கல்லறைக்குள்ளே பிரவேசித்து, 7. சீலைகள் கிடக்கிறதையும், அவருடைய தலையில் சுற்றியிருந்த சீலை மற்றச்சீலைகளுடனே*

*வைத்திராமல் தனியே ஒரு இடத்திலே சுருட்டி வைத்திருக்கிறதையும் கண்டான்..*

**மனவாட்டிக்கென்று ஒரு இடத்தை ஆயத்தம் செய்தல்**

## Building a Place for the Bride

- *இந்த பிரிவின் நாட்களில், மணவாளன் தனது தந்தையின் வீட்டிற்கு சென்று தானும் தன்னுடைய மணவாட்டியும் தங்குவதற்கு ஒரு இல்லத்தை கட்டுவார்.*
- *கிறிஸ்து தமது சபையை பிரிந்திருக்கும் நாட்களில் பரலோகத்தில் தமது பிதாவின் வீட்டில் சபை தங்குவதற்கான இடத்தை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார்.*

  Christ has been preparing living accommodations for the Church in His Father's house in heaven during His separation from His Bride.

  ***யோவான் 14:2**, என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன்.*

## மனவாட்டிக்கு அந்த நேரம் தெரியாது

## Bride Doesn't know the Day

- மணவாட்டி மனவாளனுக்கென்று காத்திருக்கும்போதும் அவர் எப்போது வருவார் என்று அவளுக்கு தெரியாது. மணவாளனுக்குக்கூட தனது தந்தை எப்போது ஒப்புக்கொள்வார் என்று தெரியாது. ஆகவே மணவாளனுக்கும் மனவாட்டிக்கும் இரண்டு பேருக்கும் திருமண நாள் தெரியாது.
- இயேசு பரலோகத்தில் தமது தந்தையின் வீட்டிற்கு சென்று தானும் சபையும் தங்குவதற்கு ஒரு ஸ்தலத்தை ஆயத்தப்படுத்த சென்றிருக்கிறார். ஆனால் சபைக்கோ**,** கிறிஸ்துவுக்கோ அவர் எப்போது திரும்ப வருவார் என்று தெரியாது. அதை பிதா ஒருவர் தவிர யாரும் அறியார்கள்.

மாற்கு **13:32**, அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார்.

***மணவாட்டியை அழைத்துக்கொள்ள மணமகன் வருகிறார்***

## Bridegroom comes to take the bride

- *பிரிவின் காலம் முடிந்த பிறகு யூத மணமகன் மணவாட்டியை தன்னோடு வாழ்வதற்கு அழைத்துக்கொண்டு போக ராத்திரியிலே வருவார்.*
- *கிறிஸ்துவும் இந்த பிரிவின் காலம் முடிந்தபிறகு சபையை தன்னோடு வாழ்வதற்கு அவர் கொண்டுபோக வருவார்.*

  **யோவான் 14:3,** நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.

***இரவில் நடக்கும் ஊர்வலம்***

## Procession to take place in the night

- *மணவாளன் தம்முடைய தோழர்களோடு ஊர்வலமாக பெரும் ஆரவாரத்தோடு தந்தையின் வீட்டிலிருந்து மணவாட்டியின் வீட்டிற்கு வருவார்.*

- கிறிஸ்து தம்முடைய சபையை எடுத்துகொள்ள வரும்போது, தம்முடைய பிதாவின் வீட்டிலிருந்து தூதர்களின் ஊர்வலத்தோடு சபையின் வீட்டிற்கு வருவார்.

**1 Thessalonians 4:16**, *ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.*

**மணவாட்டி மனவாலனோடு வாழ்வதற்கு சென்றுவிடுவாள்**

## Bride will go to the Bridegroom home to live with him.

- யூத மணமகள் தன்னுடைய வீட்டை விட்டு பிரிந்து சென்றதும் தன்னுடைய மணவாளனின் தந்தையின் வீட்டிற்கு சென்றுவிடுவாள்.
- சபையும் நடுவானத்தில் கிறிஸ்துவை சந்தித்து அவரோடு

*எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு, அவருடைய பிதாவின் வீட்டிற்கு செல்லும்.*

**1 தெசலோனிக்கேயர் 4:17,** *பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல், அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்.*

**யோவான் 14:2-3,** *2. என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். 3. நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.*

### *திருமண விருந்தினர்கள் திரட்டப்படுதல்*

## Wedding Guests assembled

- *மணவாளனும் மணவாட்டியும் தந்தையின் வீட்டிற்கு வரும்போது அங்கு திருமண விருந்தினர் திரட்டப்பட்டிருப்பார்கள்.*
- *கிறிஸ்துவும் சபையும் பரலோகத்திற்கு வரும்போது பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களால் வரவேற்க்கப்படுவார்கள். இந்த பரிசுத்தவான்கள் திருமண விழாவின் விருந்தினர்களாக கருதப்படுவர்.*

### *மணவாளனும் மணவாட்டியும் ஒன்றிணைதல்*

## Consummating the marriage

- *யூத மணமக்கள் தந்தையின் வீட்டிற்கு வந்தபின் திருமண பந்தத்திற்குள் சரீரப்பிரகாரமாக ஒன்றிணைந்து தாங்கள் முன்னர் ஏற்படுத்திய உடன்படிக்கையை பூரனப்படுத்துவார்கள்.*
- *கிறிஸ்துவும் சபையும் பரலோகத்தில் பிதாவின் வீட்டிற்கு வந்தபின் ஆவிக்குரிய முறையில் ஒன்றிணைவதன் மூலம் தாங்கள் ஏற்படுத்தின உடன்படிக்கையை பூரனப்படுத்துவார்கள்.*

***மணவாளனும் மணவாட்டியும் ஏழு நாட்களுக்கு மறைத்து வைக்கப்படுவார்கள்***

## Hiding in the Bridal chamber for 7 days

- *யூத மணமக்கள் தந்தையின் வீட்டிற்கு வந்தபிறகு ஏழுநாட்கள் மணவறையில் தனித்து இருப்பார்கள்.*
- *சபையும் பிதாவின் வீட்டிற்கு வந்தபின் ஏழு வருட காலங்களுக்கு மறைத்து வைக்கப்பட்டிருக்கும். இந்த நாட்களில் பூமியில் ஏழு வருட உபத்திரவ காலம் நடைபெறும். ஆனால் சபையோ அதற்கு பூமியில் வாழ்பவர்களுக்கு மறைத்து வைக்கப்பட்டு பிதாவின் வீட்டில் இருக்கும்.*

***மணவாட்டி அனைவருக்கும் அறிமுகப்படுத்தப்படுகிறாள்***

## Bride revealed to everyone

- *மணவாளன் மறைவிடத்திலிருந்து தன்னுடைய மனவாட்டியோடு வருவார். அப்போது மணவாட்டியின் முகம் மறைக்கப்படாமல் அனைவரும் பார்க்கும் வண்ணம் திறந்த முகத்தோடு அழைத்துக்கொண்டு வருவார்*

- ஏழு வருட உபத்திரவ காலம் முடிந்த பிறகு கிறிஸ்துவின் உண்மையான சபையை யாவரும் காணும்படி கிறிஸ்து பரலோகத்திலிருந்து வெளியே அழைத்துக்கொண்டு வருவார்.

  **கொலோசெயர் 3:4,** நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்.

  **வெளிப்படுத்தின விசேஷம் 21:9,** பின்பு, கடைசியான ஏழு வாதைகளால் நிறைந்த ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் என்னிடத்தில் வந்து: நீ இங்கே வா, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிக்கிறேன் என்று சொல்லி,

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை காட்டிலும் சபை ஐக்கியத்தை முக்கியமாக கருத வேண்டும். ஆனால் இன்றைய சபை, கிறிஸ்துவுக்கும் சபைக்கும் உள்ள இந்த மிக முக்கியமான உறவை எப்படி தவற விட்டது என்பது ஆச்சரியமாக இருக்கிறது.

இயேசு யோவான் ஸ்நானகனை குறித்து:

மத்தேயு **11:11,** ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை; ஆகிலும், பரலோகராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்.

மல்கியா தீர்க்கதரிசி பழைய ஏற்பாட்டை முடிக்கவில்லை, யோவான் ஸ்நானகனே அதை முடித்து வைத்தார்.

இதன் காரணத்தை இயேசு கீழ்க்கண்ட வசனங்களில் குறிப்பிடுகிறார்:

மத்தேயு **11:13** மற்றும் லூக்கா **16:16,**

"நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசிகள் யாவரும் யோவான்வரைக்கும் தீர்க்கதரிசனம் உரைத்ததுண்டு."

"நியாயப்பிரமாணமும் தீர்க்தரிசன வாக்கியங்களும் யோவான்வரைக்கும் வழங்கிவந்தது; அதுமுதல் தேவனுடைய ராஜ்யம் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டுவருகிறது, யாவரும் பலவந்தமாய் அதில் பிரவேசிக்கிறார்கள்."

*இங்கே இயேசு கிறிஸ்து பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களுக்கும் புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களுக்கும் தெளிவான வித்தியாசத்தை காண்பிக்கிறார்.*

*மத்தேயு **11:11**, ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை; ஆகிலும், பரலோகராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்.*

*மணவாளனாகிய கிறிஸ்து பிரிந்து சென்றுவிட்டார், தமது மனவாட்டியாகிய சபையை சேர்த்துக்கொள்ள நிச்சயமாக மீண்டும் வருவார். அவர் உங்களுக்கும் எனக்கும் ஒரு இடத்தை ஆயத்தம் பண்ண சென்றிருக்கிறார். சுமார் 2000 ஆண்டுகளாக அதை அயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார்! நிச்சயமாக அது கற்பனை செய்துபார்க்க முடியாத அளவிற்கு அற்புதமான ஒரு இடமாக இருக்கும்! அவரோடு அங்கு வாசம் செய்ய அந்த நாளை குறித்த ஏக்கம் எண்ணற்றது!!*

*புதிய உடன்படிக்கையின் விசுவாசிகள் பழைய உடன்படிக்கையின் பரிசுத்தவான்களை காட்டிலும் மேலானவர்கள்.*

சபை என்று சொல்லும் போது அதில் பழைய உடன்படிக்கையின் பரிசுத்தவான்கள் இல்லை என்பதை நீங்கள் உங்களுடைய கவனத்தில் வைத்துக்கொள்ளுமாறு
கேட்டுக்கொள்ளுகின்றேன்.